**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 83/2020 P.W. 7/L.W.7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. தினகராஜ் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. டேவிட்ராஜ் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 29.09.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்சமயம் குலசேகரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் நான் கொற்றிக்கோடு காவல் நிலையத்தில் 28.10.2019 அன்று தலைமை காவலராக பணி செய்த போது அன்று தினம் போன் மூலம் கிடைத்த தகவலின் அடிப்படையில் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்து அ.சா.1 மணிகண்டன் த/பெ. ராஜமணி என்பவர் அளித்த வாக்குமூலத்தை பதிவு செய்து மதியம் 01.00 மணிக்கு நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் தன்மைப்படி கொற்றிக்கோடு காவல்நிலையக்குற்ற எண். 129/2019 சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 506(2) இதச ன் கீழ் வழக்குப்பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சாஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக உதவி ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போன் மூலமாக எங்கிருந்து தகவல் கிடைத்தது என்றால் ஆசாரிபள்ளம் மருத்துவனையில் இருந்து தகவல் கிடைத்தது. இண்டிமேசன் கிடைத்தற்கான விவரங்களை வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்து 24 மணி நேரங்கள் கழித்து காலதாமதாக வழக்கு பதிவு செய்ததற்கான காரணத்தினை ஆவணங்களில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

காயம்பட்ட நபருக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் அப்போது அவர் எழுதும் சூழ்நிலையில் இல்லை அவர் சொல்வதை வாக்குமூலமாக பதிவு செய்தேன். வாக்குமூலம் பதிவு செய்யும் போது காயம்பட்ட நபரின் உறவினர்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். ஆனால் யார்என்று தெரியவில்லை. அவர்களிடம் அறிவேன் சாட்சியாக நான் கையொப்பம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான்.

காயம்பட்ட நபர் வாக்குமூலம் அளிக்கும் போது தக்கலை அரசு மருத்துவனைக்கு வருவதற்கு முன் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்ட விவரத்தை சொன்னாரா என்றால் ஞாபகம் இல்லை. நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கையை தபால் மூலமாக அனுப்பினோமா அல்லது நேரடியாக அனுப்பினோமா என்றால் நேரடியாக அனுப்பினோம்.

முதல் தகவல் அறிக்கையில் நீதிமன்ற குறிப்பு படி 31.10.2019ம் தேதி தான் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு வந்ததாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கால தாமதத்திற்கான காரணம் சொல்ல முடியுமா என்றால் தெரியவில்லை. முதல் தகவல் அறிக்கையின் நகல் புகார்தாரருக்கு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். எந்த தேதியில் எங்கு வைத்து நகல் கொடுத்தேன் என்றால் ஞாபகம் இல்லை.

காயம்பட்ட நபர் சம்பவத்தின் போது குற்றம் சுமத்தப்பட்ட நபருடன் மற்றோரு நபர் வந்த விவரத்தை சொன்னாரா என்றால் ஞாபகம் இல்லை. காயம்பட்ட நபரை எதிரி குத்தியதாக சொன்னாரா அல்லது வெட்டியதாக சொன்னாரா என்றால் ஞாபகம் இல்லை. காயம்பட்ட நபரின் சகோதரி ஜெயா காவல்துறையில் பணிபுரியும் விவரம் எனக்கு தெரியும் என்றால் ஜெயா காவல்துறையில் பணிபுரியும் விவரம் தெரியும் . ஆனால் அவர் தான் காயம்பபட்ட நபரின் சகோதரி என்று எனக்கு தெரியாது.

நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபரும், காயம்பட்ட நபரும் பக்கத்து பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றும், அவர்களுக்குள் ஏதோ ஒரு மனக்கசப்பு காரணமாக பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. காயப்பட்ட நபரின் சகோதரி காவல்துறையில் பணிபுரிவதால் காயம்பபட்ட நபருக்கு ஆதரவாக குற்றம்சுமத்தப்பட்ட நபரின் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளதால் சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

<u>**மறுவிசாரணை:**</u>

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram .